இதழ் 30 | மலர் 09
ஜுலை – செப்ரெம்பர் 2020


தலைவி
இல. 191, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 04
+94 11 250 62 72
+94 11 258 51 90
info@viluthu.org
www.viluthu.org

காலாண்டு இதழ்

# தலைவி

## தலைமைத்துவத்தை நோக்கி...

# வானலைகளில் இளையோர் பெண்களின் குரல்கள்



விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நடத்தப்படும்
**'இருளில் ஓர் ஒளிக்கீற்று'** வானொலி நிகழ்வு



**நாளை காலை (06-07-2019)**
**09.30 மணி முதல்**
**10.30 மணி வரை**
**செவிமடுக்கத் தவறாதீர்கள் ....**
**பண்பலை வரிசை – 104.7/104.9**

இவ்வாரம் கலந்து கொள்கின்றனர் யாழ்மாவட்டத்திலிருந்து
'நிலைமாறுகால செயன்முறையில் பெண்கள்' பற்றி கந்துரையாட
குகதாசன் - விழுதின் சமூதாயச்சங்கிலி தன்னார்வ தொண்டர்
வேல்ராஜ் - Active Citizen Group member
நவரஞ்சித மலர் - நிலைமாறுகாலநீதிக்காய் பெண்கள் குழுவிலிருந்து

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் கடந்த பல வருடங்களாக வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடாக எங்களது பெண்களின் இளையோரின் ஆற்றல்களினை வெளிக்கொண்டு வரும் வகையில் செயற்பட்டு வருகின்றது. 'இருளில் ஓர் ஒளிக்கீற்று' என்ற வானொலி நிகழ்ச்சியின் ஊடாக மறைந்துள்ள பெண்களின் இளையோரின் ஆற்றல்களினை வெளிக்கொணரும் இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, களுத்துறை, கொழும்பு, ஹட்டன் மற்றும் பதுளை மாவட்டங்களிலிருந்து பல ஆளுமைகள் பங்குபற்றியிருந்தனர். குறிப்பாக இந்த வானொலி நிகழ்ச்சிகளில் நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி, சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல், இளையோர் நில்லிணக்கச் செயன்முறையில் பங்குபற்றல், பெண்கள் தீர்மானமெடுக்கம் துறைகளினை ஆக்கிரமித்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட மற்றும் வெற்றி பெற்ற பெண்களின் அனுபவங்கள், ஊடகங்கள் சகவாழ்வினை உருவாக்குவதில் கொள்ளும் வகிபாகம், கொரோனா கொள்ளைநோய் காலப் பரப்பில் மேற்கொண்ட மனிதாபிமானச் செயற்பாடுகள், உள்ளூர் தலைமைத்துவ முயற்சிகளால் உருவாக்கப்படும் சமூக இயக்கங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பகிரப்பட்டன.

இவற்றினால் ஈர்க்கப்பட்ட பிற மாவட்டங்களின் மக்கள் விழுது தமது பிரதேசங்களிலும் பணிகளைச் செயற்படுத்துவதுடன் தமது பிரதேச தன்னார்வத் தொடண்டர்களுக்கான வாய்ப்புக்களினையும் வழங்கி உதவுமாறு கேட்டுள்ளனர். பல அரசியல்வாதிகள், அரச அலவலர்கள் இந்நிகழ்வு பற்றிய தங்களது கருத்துக்களினையும் பகிர்ந்து கொண்டிருக்கின்றனர். தேர்தற்காலங்களில் அரசியல்வாதிகளுக்கு உரிய வேட்பாளர்களை அறிமுகப்படுத்த இந்த ஊடக நிகழ்ச்சி உதவியுள்ளது. தொடரும் மாதங்களிலும் நீங்கள் இந்த வானொலி நிகழ்ச்சியினை தென்றல் பண்பலைவரிசையில் சனிக்கிழமை தோறும் காலை 10 மணி முதல் செவிமடுக்கலாம். உங்களது கருத்துக்களினை விழுதின் முகப்புத்தகப் பக்கம் ஊடாக அல்லது 0112506272 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது *info@viluthu.org* என்ற ஈமெயில் ஊடாகவோ தெரியப்படுத்துங்கள். கருத்துக்களினைச் செவிமடுக்கக் காத்திருக்கின்றோம்.

# அன்புத் தோழியரே!

அனைவருக்கும் வணக்கம்!

ஒரு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி இந்த ஒருவருட காலத்திற்குள் நாட்டின் ஆட்சி மாற்றம், மக்களது அரசியற் பிரச்சினைகளில் மாற்றம், மக்களது மனநிலைகளில் மாற்றம் அதன்வழி அரசியற் தலைமைகளில் மாற்றம் என இன்னோரன்ன விடயங்கள் நடந்தேறி விட்டன. இதனிடையே மீண்டுமொரு அச்சநிலைமை சிறுபான்மை மக்களிடையே ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் வெற்றியினால் தோற்றுவிக்கப்பட்டு விட்டது. போரின்போது யாருடைய வழிகாட்டலின்கீழ் இன்னோரன்ன உயிர்கள் காவுகொள்ளப்படுவதற்குக் காரணமானமெனச் சுட்டிக்காட்டப்பட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நாட்டின் ஜனாதிபதியாக்கப்பட்டுவிட்டார் பொரும்பான்மையின வாக்குகளால். நாட்டில் அரங்கேற்றப்பட்ட யுத்தம் நியாயபூர்வமானது என்றும் இறப்புக்கள் பரவாயில்லை என்றதொரு மனப்பான்மையினையும் பெரும்பான்மையினம் கொண்டுள்ளதென்பதனை இந்தத் தேர்தல்கள் வெற்றிகள் காட்டிவிட்டன. இன்னும் ஜனாதிபதியின் கன்னியுரை கூட சிறுபான்மையின மக்கள் மீதான காழ்ப்புணர்ச்சியினைக் காட்டிவிட்டது.

இந்நிலையில் போர்க்குற்றங்களுக்கான நீதியினை நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது? அதுவும் அண்மையில் காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட கூற்று உண்மையில் இவ்வளவு காலமும் தமது அன்பான உறவுகள் தொடர்பாக உண்மை வெளிப்படுத்தப்படும், நீதி நிலைநாட்டப்படும் என்று எதிர்பாத்துக் காத்துக் கொண்டிருந்த உறவுகளுக்கு அவர் தெரிவித்த செய்தி இந்த நாட்டில் மீண்டும் அராஜகம் தோற்றம் பெறலாம் என்ற சமிக்ஞையினையே காட்டுகின்றது. இவ்வளவு காலமும் வீதியோரங்களில் மழையிலும் வெயிலிலும் நீதிவேண்டி நின்ற உறவுகள் கையறுநிலையில் இருக்கின்றன. மேடைகளிலும் நேர்காணல்களிலும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்திய கருத்துக்களுக்கு அர்த்தமே இல்லாமற்போய்விட்டன. இத்தகைய நிலைமையில் ஐ.நா.வின் பிரேரணை 30/1 இற்கு இலங்கை வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக புதிய அரசாங்கம் ஜெனீவா கூட்டத் தொடரில் தெரிவித்த செய்தியானது பாதிக்கப்பட்ட உறவுகளின் மத்தியில் அரசின் மீதிருந்த நம்பிக்கையினை முற்றுமுழுதாக இல்லாமற் செய்து விட்டது. அடுத்த நகர்வு எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதனை பாதிக்கப்பட்ட மக்களின் செயற்பாடுகளில்தான் தங்கியுள்ளது.

நிலைமாறுகாலநீதிக்காய் இளையோரும் பெண்கள் வலையமைப்புக்களும் எங்களது திட்டங்களின்வழி இணைந்து குரல் கொடுப்பதனையும் செயற்படுவதனையும் பார்க்கும்போது எமது பிரதேசங்களில் இனி சிவில்சமூக அமைப்புக்களுக்குத் தேவைகள் இல்லை என்றே புலப்படுகின்றுது. நாங்கள் எதிர்பார்க்கலாம் இனிவரும் காலங்களில் ஏனைய இளையோர் குழுக்களுக்கும் மகளிர் வலையமைப்புக்களுக்கும் இவர்களே முன்னோடியாக நின்று மாவட்டங்களின் அபிவிருத்தியில் கருத்துக்களினைக் கூறித் தாக்கங்களினை ஏற்படுத்தக்கூடிய ஒரு குழாமாகச் செயற்படக்கூடியவர்களாகத் திகழ்வார்கள். அதேநேரம் எங்களது பெண்களிற் பலர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். ஆனாலும் இவர்களில் எவரையும் வடக்கு, கிழக்கில் வெல்ல வைக்கவில்லை என்பது மிகவும் மனவருத்தத்துக்குரியது. கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் பெண்களைப் போட்டியிட வைத்து வெல்ல வைத்த நீங்கள் இம்முறை உங்களது முயற்சிகளினை ஏன் கைவிட்டீர்களென நாம் முன்வைக்கும் வினாக்களுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியவர்களாகவே உள்ளீர்கள். பார்க்கலாம் மாகாணசபைத் தேர்தல்களில் இந்த நிலைமை எத்தகைய மாற்றங்களினைப் பெறுகின்றதென்று.

மாவட்டப் பெண்கள் சமாசங்களும் அமரா ஒன்றியங்களும் தங்களது கொள்கை வகுப்பாளர்களையும் சேவை வழங்குனர்களையும் அழைத்துத் தமது பிரச்சினைகள் அடங்கிய பரிந்துரை ஆவணங்களினைச் சமர்ப்பித்துள்ளார்கள். பல வாக்குறுதகளினையும் அவர்களிடமிருந்து பெற்றிருக்கின்றார்கள். பார்ப்போம் எவ்வளவு தூரம் அவர்களது வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றனவென்று.

டிசம்பர் மாதத்தில் விழுதின் உறவுகளிலொன்றினை நாம் இழந்துவிட்டோம். நாளும் பொழுதும் உங்களுடன் புன்னகை காட்டி உறவாடிப் பணியாற்றிய திருகோணமலைக் கிளையின் அலுவலர் லக்ஷிகா நோயினால் எங்களை விட்டுச் சடுதியாகப் பிரந்துவிட்டார். இது எங்கள் அனைவரது மனதிலும் சொல்லொணாத் துயரத்தினை ஏற்படுத்தி விட்டது. இளங்குருத்தொன்றினைக் காலனுக்கு எதிர்பாராமல் பறிகொடுக்கவேண்டிய நிலை அவரது குடும்பத்திற்கும் விழுதுக் குடும்பத்திற்கும் உருவாகி விட்டது. அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிராத்தியுங்கள்.

இந்தத் தலைவி இதழ் ஒன்பதாவது வருடத்தின் ஆரம்ப இதழாக மலர்கின்றது. கடந்த ஒருவருட காலச் செயற்பாடுகளையும் இயன்றளவில் கொண்டுவர முயற்சித்துள்ளது. விடுபட்டிருக்கும் அம்சங்கள் இடுத்த இதழில் பூரணப்படுத்தப்படுமென்ற உறுதிப்பாட்டுடன் அடுத்த இதழில் சந்திக்கும்வரை...

**- அன்புடன் இந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீண்டும் நினைவுகூருகின்றோம்!

விழுதின் ஸ்தாபகரும் தலைவியுமான அமரர் சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்து அரை தசாப்தங்கள் ஆகிவிட்டன. பெண்ணிலைவாதியாக, மனித உரிமைச் செயற்பாட்டாளராகப் பன்முகப்பட்ட ஆளுமை கொண்ட இச்செயற்பாட்டாளர் மறைந்து எத்தனை வருடங்கள் சென்றாலும் அவர் உருவாக்கிய விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் தனது ஜனநாயகச் செயற்பாடுகளினை எத்தனை தடைகள் வந்தாலும் தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டே செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதேபோன்று அவரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட, செம்மைப்படுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைப் போராளிகள், அரசியற் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மற்றும் பயிற்சியாளர்கள் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டு பெண்மணியை நினைவுபடுத்திக் கொண்டேயிருப்பார்கள். விழுதும் தனது காத்திரத்தன்மை உணர்ந்து மக்களுடன் மக்களாய் இணைந்து அவரின் தீர்க்கதரிசனப் பார்வையுடன் தொடர்ந்தும் பணியாற்றும்.





## பதுளை நோக்கிய Active citizen Group தேடற் பயணம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அண்மையில் தெரிந்தெடுக்கப்பட்ட இளையோருக்கான அரசியல், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசியற் கற்கைநெறியினையும் தேசிய இளையோர் மாநாட்டினையும் நடாத்தியிருந்தமை பற்றிக் கடந்த இதழ்கள் மூலம் தெரிந்திருப்பீர்கள்.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டோர் தம்மை Active citizen Group ஆக அடையாளப்படுத்தி அண்மையில் பதுளை மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களையும், அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைமைகள், அவர்களது நாளாந்த போராட்டங்கள், சம்பள உயர்வுப் பிரச்சினைகள், பெண்களை வலுப்படுத்தல் மற்றும் சிறார்களின் கல்வி நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடியிருந்ததுடன் அவர்களுடன் இணைந்து செயற்படத் தமது அவாவினையும் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக இளையோருடன் தமது பயணம் தொடர அங்குள்ள இளையோரின் ஒத்துழைப்பினையும் கேட்டுக் கொண்டனர். அதுமட்டுமன்றி தம்மால் இயன்ற உதவியாகத் தாம் சேகரித்த பணத்தினைக் கொண்டு முன்பள்ளி மாணவர்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளையும் எழுதுகருவிகளையும் வழங்கி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி இருந்தனர். அவர்களது களப்பயணத்தின்போதான காட்சிகளிற் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட்-19 கொள்ளைநோயும் விழுதின் மனிதாபிமான நடவடிக்கைகளும்


உலகளாவிரீதியில் மக்களை அச்சத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கும் கொடிய கொள்ளைநோயான கொரோனா வைரஸ் (கொவிட் 19) எந்தவோர் நாட்டு மக்களையும் தன் தாக்கத்திற்கு உட்படுத்தத் தவறவில்லை. இந்த விடயத்தினை எழுதிக் கொண்டிருக்கும் இந்தநேரம் வரை சர்வதேச ரீதியாக 218 நாடுகளில் சுமார் 43 மில்லியன் மக்கள் கொரோனாத் தொற்றுக்குள் ளாகியுள்ளனர். 11 இலட்சத்து 60,650 பேர் இறந்திருக்கின்றனர். இந் நிலை இன்னும் அதிகரிக்கும் என்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் எதிர்வுகூறல் அறிக்கையின்படி அனைத்து நாடுகளினதும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சர்வதேச உறவுகளினை மிகவும் பாதிப்படைய வைத்துள்ளது இந்தக் கொள்ளைநோய். இந்த நிலைமையில் விழுதும் கொரோனாவினால் தொழிலின்றி சடுதியாகப் பாதிக்கப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் குடும்பம், முன்னாள்



போராளிகள் குடும்பம், கூலித்தொழில் மேற்கொள்வோர், மூன்றாம் பாலினத்தவரென சுமார் 1871 நலிவுற்ற குடும்பங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பின் அனுசரணையுடன் ஆறாயிரம் ரூபாய் பணக்கொடுப்பனவு மற்றும் ரூபாய் 2500.00 இலிருந்து ரூபாய் 7500.00 வரை பெறுமதியான துரித நிவாரணப் பொதிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வழங்கி வைத்து உதவவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அதுமட்டுமன்றி திருகோணமலை மாவட்டத்திலே திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் யு.எஸ்.எயிட் இன் ஸ்கோர் (SCORE) திட்டத்தின் நிதிப்பங்களிப்புடன் சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான இரு சலவை இயந்திரங்கள், முகக்கவசங்கள் தைப்பதற்கான இரு தையல் இயந்திரங்கள், அவற்றுக்கான துணிவகைகள் மற்றும் கத்தரிக்கோல்கள் போன்றவை வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவத் திடம் கையளிக்கப்பட்டன. இம்மனிதாபிமான சேவைகள் பற்றிய படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

# இளையோருக்கான ஆய்வுமுறையியல் தொடர்பான பயிற்சிகள்

விழுது நிறுவனத்தினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஐம்பது இளையோருக்கான ஆய்வு முறையியல் தொடர்பான பயிற்சியொன்று அண்மையில் அவர்களுக்கு யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை விழுது அலுவலகங்களில் நடாத்தப்பட்டன. இதன்போது, சமூகப் பிரச்சினைப் பகுப்பாய்வு, ஆய்வின் முக்கியத்துவம், முறையியல்கள், ஆய்வுப் பகுப்பாய்வு, ஆய்விலிருந்து பெறப்படும் முடிவுகளிலிருந்து சான்றுகளின் அடிப்படையிலான ஆதரித்து வாதிடலினை நாம் எவ்வாறு மேற்கொள்ளலாம் போன்ற விடயங்களினைப் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ந. பாஸ்கரன் அவர்களும் அபிவிருத்திசார் பயிற்சியாளர் க.தங்கேஸ்வரன் அவர்களும் வழங்கியிருந்தனர். ஒவ்வொரு பங்குபற்றுனரும் தமது விருப்பத்திற்கேற்ப



தனியாகவும் குழுவாகவும் இணைந்து பிரச்சினைகளினைத் தெரிந்தெடுத்து ஆய்வுத்தலைப்புக்களினை வடிவமைத்திருந்தனர். ஆய்வுகளின் முடிவில் அவர்களது கண்டுபிடிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அடுத்துவரும் தலைவி இதழ்களில் பகிரப்படும். பயிற்சியின்போது பெறப்பட்ட புகைப்படங்களிற் சில தலைவி வாசகர்களுக்காகப் பகிரப்படுகின்றது.

இளையோர் மேற்கொள்ளும் ஆய்வுகளின் தலைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவை தொடர்பாக இந்த இளையோருக்கு உதவ ஆர்வங்கொண்டவர்கள் அவர்களுக்கு வழிகாட்டலாம். இத்தலைப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்கள், சிவல் சமூக அமைப்புக்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு எதிர்காலத்தில் உதவலாமென்ற அடிப்படையில் இங்கு தரப்படுகின்றது.

★ போருக்குப் பின்னரான வறுமையும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சவால்களும்.
★ நல்லிணக்கத்தினை ஊக்குவிப்பதில் மொழியின் வகிபாகம்
★ பேண்களின் அரசியல் பங்கேற்பில் ஆண்களது இடையீடுகள்
★ மதுப்பாவனையும் பண்பாட்டுரீதியிலான தாக்கங்களும்
★ போதைவஸ்துப்பாவனையும் இளையோர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும்.
★ காணாமலாக்கப்பட்ட குடும்பங்களும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்
★ தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டமும் அரச நிறுவனங்களில் அதன் பிரயோகமும் தொடர்பானதோர் மீளாய்வு
★ இலங்கை மக்களும் மொழியும் தொர்பானதோர் பார்வை

# பெண்ணுக்கொரு வாக்கு




'உங்களுக்காய் எங்களது வாக்குறுதிகள்' என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை விழுது அரசியலில் போட்டியிடும் பெண்களுக்கு ஆதரவளிக்கும் அவளுக்கொரு வாக்கு பிரசாரத்தினை வழமை போன்று முன்னெடுத்திருந்தது. ஒவ்வோர் மாவட்டங்களிலும் விழுது அலுவலர்களும், மாவட்டப் பெண்கள் சமாச அங்கத்தவர்களும் இளையோருடன் இணைந்து வாக்களிப்பின் முக்கியத்துவம், பெண்களுக்கு வாக்களித்து வெல்ல வைக்க வேண்டியதன் அவசியம் மற்றும் ஜனநாயகரீதியிலான வாக்களிப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளைப் பாராளுமன்றத் தேர்தலினையொட்டி முன்னெடுத்திருந்தனர்.

அது மட்டுமன்றி மாவட்டரீதியிலான நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்துப் பெண் வேட்பாளர்களையும் இணைத்து ஒரே மேடையில் அவர்களது கட்சியின் கொள்கைகள் மக்களுக்கான அவர்களது வாக்குறுதிகள் தொடர்பாகப் பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் விழுது ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அது மட்டுமன்றி அவர்களது தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தினையும் அரசியற் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்ததுடன் அதனை ஓர் ஆவணப்படுத்தலாகவும் பேணியிருந்தார்கள்...

# விழுதின் நூல் வெளியீடுகள் வரிசையில்...

## மகளிராய் கூடி பெண்கள் சமாசங்கள் அமைப்போம்




விழுது நிறுவனத்தின் தொடர்ந்தேர்ச்சியான நூல்கள் மற்றும் ஆய்வுகளின் வெளியீடுகள் வரிசையில் இம்முறை சற்று மாறுபட்டதொரு நூலாக 'மகளிராய் கூடிப் பெண்கள் சமாசங்கள் அமைப்போம்' என்ற கையேட்டு நூலினை எமது நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஆம் விழுதின் செயற்பாடுகளினை அனைவருக்கும் பறைசாற்றும் விதத்தில் ஏழு மாவட்டங்களில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் மாவட்டப் பெண்கள் சமாசம் மற்றும் அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியங்களுக்கு வழிகாட்டும் விதத்தில் அவர்கள் சுயமாகச் செயற்படுவதற்கான வழிகாட்டற் கையேடே இந்த வெளியீடு. மாவட்டங்கள்தோறும் உருவாக்கப்படும் மாவட்டப் பெண்கள் சமாசங்களின் நோக்கம், இயங்குமுறை மற்றும் அவர்களின் செயற்பாடுகள், அவற்றினால் ஏற்படும் சமூகமாற்றங்கள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிய விளக்கங்களினை அளிக்கும் கையேடாகவும் அமரா ஒன்றியங்களின் செயற்பாடுகள் பற்றியும் தெளிவுபடுத்தும் விதமாகவும் விடயங்களினை உள்ளடக்கி இந்த வெளியீடு விழுதினால் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேட்டினைப் பெறவிரும்புபவர்கள் விழுதின் தலைமையலுவலகத்திலோ அல்லது மாவட்ட அலுவலகங்களிலோ தொடர்பு கொண்டு இலவசமாகப் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியில் சர்வதேச விதவைகள் தினத்தினை முன்னிட்டு 'நிலைமாறுகால நீதியினை நோக்கி எங்களது குரல்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் அரசியல்வாதிகளிடம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியங்கள் தமது சமூகப் பொருளாதார அரசியற் பண்பாட்டு உரிமைகள்சார் வேண்டுகைகள் தொடர்பான பரிந்துரை ஆவணமொன்றினைச் (Womanifesto document) சமர்ப்பித்திருந்தார்கள்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். சிறீதரன் கலந்துகொண்டு அவர்களது வேண்டுகோள்கள் அடங் கிய ஆவணத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்வைக்கப்பட்ட விடயங்களினைப் பாராளுமன்ற அமர்விலும் அவர் பகிர்ந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமரா ஒன்றியத்தினரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் கீழே முழுமையாகத் தரப்படுகின்றன.

**பூநகரியில் இடம்பெற்ற 'நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல்கள்' அமரா குடும்பத் தலைமைதாங்கும் ஒன்றியத்தினரின் சர்வதேச விதவைகள் தின நிகழ்வு**







# 'நிலைமாறுகால நீதியினை நோக்கி எங்களது குரல்கள்'

## அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியம்

வடக்கின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போரின் கொடூரத்திலிருந்து தப்பிப் பிழைத்து, வாழ்வினை சவாலுக்குட்படுத்தி எங்கள் வாழ்க்கையினை உறுதி தளராது முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம். போரினாற் பாதிக்கப்பட்ட குடும்பத்தினைத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் பெண்களாகிய நாம். போர் விதவைகளாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களாக காணாமற்போன அங்கத்தவர்களின் குடும்பங்களாக தடுப்புக்காவலிலுள்ள அங்கத்தவர்களின் குடும்பங்களாக, உறவினர்களும், மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்டு குடும்பத்தினைத் தலைமை தாங்கமுடியாத நிலையிலுள்ள ஆண்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களாக- தாய் தந்தையை இழந்த குடும்பத்தினைத் தலைமை தாங்கும் பெண்களாய்- மாற்றுத்திறனாளிகளாய் குடுமபத்தினைத் தலைமை தாங்கும் பெண்களாய் முன்னாள் போராளிகளாய் உள்ள நாம் வீரம் செறிந்த மண்ணில் பிறந்ததனாலோ என்னவோ இன்றுவரை எத்தனையெத்தனையோ துன்பங்களினையும் வேதனைகளினையும் சுமந்து நாம் அனுபவித்த அவலங்களுக்கெல்லாம் நீதி வேண்டி, எங்களது பிரதிநிதிகள் எமக்கான குரல்களாய் பாராளுமன்றத்தில் ஒலிப்பார்களென்ற நம்பிக்கையுடன் எங்களது வேண்டுகோள்களினையும், ஆதங்கத்தினையும் உங்களிடம் முன்வைக்க விரும்புகின்றோம்.

வாழ நினைத்தால் வாழலாம் என்ற நேர்வழியுடன் சென்றாலும் எங்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகளெல்லாம் போருடன் நலிந்துவிட்டன. எங்களது உறவுகள் எம்முடன் இருந்தபோது இருந்த உற்சாகம் இன்று இல்லை. ஆனாலும் எங்களைப் போன்றதொரு நிலைமை எங்களது சமுதாயத்திற்கு இனி வரக்கூடாது என்ற ஓர்மத்துடன் வாழும் எமக்கு இந்த சர்வதேச தினம் எங்களது கருத்துக்களை வெளியுலகிற்கு உணர்த்த கிடைத்ததொரு சந்தர்ப்பம். போரினாற் பாதிக்கப்பட்ட பெண்கள் என்ற அடைமொழிகள் எங்களது தலைமுறைக்கு இனி இருக்கக்கூடாது நீதியினை நிலைநாட்டிய பெண்களின் பிள்ளைகளென்ற அடைமொழிகள் எமக்குப் போதும். அதற்காகவே நாம் அனைவரும் இணைந்த அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியங்களின் உறுப்பினர்களாய் நாம் உங்களிடம் எங்களது வேண்டுகோள்களையும் சிபாரிசுகளையும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் சார்பாக முன்வைக்கின்றோம்.

நாம் சமூகரீதியாக நலிவுற்றவர்களாக எமது பங்கேற்பு சிவில் சமூகத்துடனும் அரசியல் கட்டமைப்புக்களுடனும் மிகவும் இழிநிலையில் உள்ளதனால் ஒடுக்கப்பட்டதோர் குழுமமாக நாம் நோக்கப்படுகின்றோம். முன்னாள் போராளிகளாக அஞ்சாது போராடிய நம் பெண்களது வகிபாகம் இன்று கட்டுப்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலில் எங்களது பங்கேற்பு இன்னமும் இப் பிரதேசங்களிலிருந்து வலுப்படுத்தப்படுத்தப்படவில்லை. ஆனாலும் எங்களது சமூக, பொருளாதார, அரசியற் பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்படுவதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எங்களது குரல்கள் இவற்றுக்காய் [illegible] தெற்கினைத் [illegible]

போரினாற் பாதிக்கபட்ட பெண்களாய் நாம் முப்பது வருடங்களாய் துயரினை அனுபவித்து வருகின்றோம். கணவரை இழந்து, குடும்பத்தின் அங்கத்தவர்களை இழந்து ஆண்துணையின்றி ஆதரவற்று வாழும் நலிவுற்ற மக்களாகிய நாங்கள் எங்களது பாதுகாப்பினையும் எங்களது பிள்ளைகளின் பாதுகாப்பினையும் முதன்மையாகக் கோரி நிற்கின்றோம். எங்களால் எங்களது பிள்ளைகளைத் தனித்து விட்டு தூர இடங்களுக்கு வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபடச் செல்வது அச்சமாகவுள்ளது. ஒருபக்கம் இராணுவமயமாக்கல் மறுபுறம் அதிகரித்து வரும் இளைஞர்களின் போதைவஸ்துப் பாவனை. நாம் உழைப்பதற்கு ஒருபோதும் அஞ்சுபவர்களல்ல. ஆனாலும் பல வருடங்களாகத் தொடரும் எங்களது மனக்கவலைகளும் ஆரோக்கியமற்ற நிலையும் எங்களை நோயாளிகளாக்கி விட்டன. எங்களது உறவுகள் உயிரோடு இருக்கின்றார்களா இல்லையா என்ற ஏக்கமும், விரக்தியும் எம்மீதே எமக்கு அக்கறையில்லாத நிலையினை ஏற்படுத்தி விட்டன. இருந்தும் நாம் எம் பிள்ளைகளுக்காக வாழ வேண்டியுள்ளது. தொடர்ந்தேர்ச்சியான இராணுவ அச்சுறுத்தல்களும் இன்றும் நாம் காணாமலாக்கப்ட்டோர் இணைந்து நடாத்தும் கூட்டங்களுக்கும் ஆர்பாபட்டங்களுக்கும் சென்று வந்ததாலும் எம்மைப் பற்றிய தகவல்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சேகரிக்கப்படுகின்றன. இந்த விடயங்களினை நாம் கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலும் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தோம்.

[illegible] உறவுகள் எங் [illegible]ளென்று தெரியா நிலையில் நம் பிள்ளைகளையும் விட்டுத் தூர இடங்களுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள முடியா நிலை இன்னும் தொடர்கின்றது. மறுபுறம் மாத சம்பளத்துக்காய் நாம் தொழில்புரியுமிடங்கள் சமூகத்தினரால் சந்தேகக்கண்ணோடு நோக்கப்படுகின்றன. என் பிள்ளை பட்டினி கிடக்கும்போது என்னால் பார்த்துச் சகித்து வாழ நாம் ஒன்றும் ஜடமல்ல. நாங்கள் உழைக்கவேண்டிய கட்டாய நிலையிலே வாழ்ந்து வருகின்றோம். அன்புக்குரிய உறவுகள் இருந்திருந்தால் எங்களது நிலை இன்று வேற விதமாக இருந்திருக்கும். எங்களது உறவுகள் எங்குள்ளார்களென்றாவது அறிந்து சொல்லுங்கள். நாட்கள் கடந்த உண்ணாவிரதப் போராட்டங்களில் எத்தனையோ உறவுகள் ஏக்கத்துடன் மடிந்து விட்டன. காணாமலாக்கபட்ட காணாமற்போன உறவுகள் இருக்கின்றார்கள் என்று நாம் அறிந்தாலே போதும் எங்களுக்கு பலம் கிடைத்து விடும். எங்களது குடும்பத்தினை நாம் கொண்டு நடாத்துவதற்கு எமக்குரிய வாழ்வாதார முயற்சிகளுக்கான முதலினைத் தருவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுங்கள். இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆரம்பிக்கும்வரை எம்மைக் காத்திருக்க வைக்காது எமக்கான மாதாந்தக் கொடுப்பனவு இருபதாயிரத்தினையாவது இந்த அரசாங்கம் வழங்குவதற்குச் சிபாரிசு செய்யுங்கள். வெறும் ஆறாயிரத்திலிருந்து ஆரம்பிக்கும் தொகை எங்களது வாழ்வுக்குப் போதுமானதா?

இராணுவத்தின் பிடிக்குள் ஒருபுறம் எங்களது காணிகளும் அகப்பட்டுள்ளன. குடும்பத்தினைத் தலைமையேற்றும் நாங்கள் எங்கள் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வோம்? இன்னொருபுறம் தேசவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முமைச் சட்டத்தின்கீழ் கணவரது கையொப்பமின்றி எமது காணிகளினை விற்கவும் வழியில்லை. ஓர் முயற்சியினைத் தொடங்கவும் வழியில்லை. அதற்கான மாற்று எற்பாடுகளினை அரசாங்கம் தரும்பட்சத்தில் நாம் பிறரில் தங்கியிராது எம் வாழ்வாதார முயற்சிகளினை முன்னெடுக்கலாம்.

தற்போது எமது வாழ்வாதாரமுயற்சிகள் மிகக் குறுகிய வட்டத்திற்குள் உள்ளவையாகவும், பருவகாலத்திற்கேற்ப இருப்பவையாகவும் இருக்கின்றன. அதிலும் பாகுபாடுகளை எதிர்நோக்குகின்றோம். கூலிவேலைகளுக்கு நாம் போனால் எங்களுக்கு சிலசமயங்களில் நாளொன்றுக்கு ரூபா 500 தான் வழங்கப்படும் அதே நேரத்தில் ஆண்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 1000-1500 வரை வழங்கப்படுகின்றது. எமக்கு இருக்கும் வினைத்திறன்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பதும் எமது பிரச்சினையை இன்னும் அதிகரிக்கின்றது. புதிய தொழில்நுட்பம் உபயோகிக்கப்படும் பயிற்சிகள் எமக்குக் கிட்டாத காரணத்தினால் எங்கள் உழைக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்படுகின்றது.

குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்களாக இருந்து, நிரந்தர வருமானமின்றி வறுமையில் வாழும் எங்களுக்கு சாதாரண நிதி நிறுவனங்களிலிருந்து கடன் வசதிகளைப் பெறுவதும் கடினமாக இருக்கின்றது. நுண்நிதிக்கடன்கள் எங்கள் மீதான பொருளாதார மற்றும் பாலியற் சுரண்டல்களினை அதிகரிக்கச் செய்கின்றன.

நாங்கள் செய்யும் உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி எங்களது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் முயற்சிகளினை ஆதரவளிப்பவர்களாக அரசியல்வாதிகள் முயற்சிக்க வேண்டும். பாதை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இல்லாமையும் எங்கள் தொழில் வாய்ப்புக்களைப் பாதிக்கின்றன. பலவிடங்களில் இராணுவத்தினரால் பாரிய அளவிலான காணிகள் சுவீகரிக்கப்பட்ட காரணத்தினால் எமது வாழ்வாதாரங்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான வளங்கள் பறிக்கப்படுகின்றன.

பல அரசாங்க வாழ்வாதார முயற்சிகளுக்கான அல்லது சுயதொழில்; வாய்ப்புக்களுக்கான உதவிகள் 50 வருட வயதெல்லை குறித்து தரப்படுகின்றன. 50 வயதுக்கு மேலான பெண்கள் அவற்றில் பயன் பெற முடியாமல் உள்ளனர். வாழ்வாதார முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் குறைந்த நிலையில், கசிப்பு வடித்தல் போன்ற சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளிலும் மத்தியகிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்வது போன்ற பாதுகாப்பற்ற, எமது குடும்பங்களைப் பாதிக்கின்ற, தொழில்களிலும் நாம் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

எமது சமூகத்தினை வலுப்படுத்துவதாக உள்ளூர் வளங்களையும் வினைத்திறன்களையும் பயன்படுத்தும் வகையில் எமது கிராமங்களில் முதலீடுகள் நடைபெற வேண்டும். சந்தைப்படுத்தக்கூடிய திறன்களை நாம் பெறும் வகையில் பயிற்சிகளும் அவற்றைச் செம்மையாக செயற்படுத்தக்கூடிய வளங்கள் ஒதுக்கப்படுதலும் செயற்படுத்தப்பட வேண்டும்.

பிரதான வழிகளில் மட்டுமல்லாது உள்ளிடங்களிலும் பாதை அபிவிருத்தி, வீதி விளக்குகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி போன்ற உட்கட்டுமான அபிவிருத்தியினை மேற்கொள்ளவேண்டும். இன்றைய நிகழ்வுக்குச் சமுகமளிப்பதற்காக மூன்று மணித்தியாலங்கள் முன்பாகவே நாம் புறப்பட்டு வர வேண்டியிருந்தது. 50 வயதுக்கு அதிகமான பெண்களும் இவ்வுலகில் வாழ வேண்டியவர்களென்பதனால் அரசாங்க உதவித்திட்டங்களுக்கு வயதெல்லை போடக்கூடாது என்பதனையும் வலியுறுத்த விரும்புகின்றோம். வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளவோ மலசலகூடங்கள் நீர்வசதிகளைப் பெற்றுக் கொள்ளவோ இயலாதவர்களாக இருக்கின்றோம். வீட்டுவசதி போன்ற உதவித் திட்டங்கள் பெரிய குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படுவதால் தனித்து வாழும் பெண்களும் தங்கி வாழும் ஓரிரண்டு குடும்ப உறுப்பினருடன் வாழும் பெண்களும் இங்கு ஒதுக்கப்படுகின்றனர்.

வீட்டுத் திட்டங்கள் போன்ற சமூக உட்கட்டுமானத் திட்டங்கள் பயனாளிகளின் உழைப்பு ரீதியான பங்களிப்பினை வேண்டுவதனால் பெண்களாகிய நாங்கள் கூலி வைத்தே அவற்றைச் செய்து முடிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். இது எங்களது கடன் சுமையை அதிகரிக்கின்றது. அரசாங்கம் தற்போது வழங்கும் விவசாய மானிய உதவிகளெல்லாம், உதாரணமாக உர மானியம், நெல் விவசாயிகளுக்கே வழங்கப்படுகின்றது. நாங்கள் பெண்கள் அனேகமாக மேட்டுநிலப் பயிர்ச்செய்கை செய்பவர்களாக இருப்பதனால் இச்சலுகைகள் எங்களுக்குக் கிட்டுவதில்லை.

உதவித் திட்டங்கள் யாருக்கு வழங்கப்படவேண்டும் என அரச நிறுவனங்களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெளிப்படைத் தன்மையற்றவையாக இருப்பதால், எம்மைப் போன்ற சமூகத்தின் பலவீனமான குழுக்கள் மேலும் ஓரங்கட்டப்படுகின்றன. அரசினால் வழங்கப்படும் மாதாந்த உதவித் திட்டங்கள் தற்போதைய விலைவாசி உயர்வுக்கு கொஞ்சம்கூட ஏற்றதாக இல்லை.

சமுர்த்தி போன்ற திட்டங்கள் வழங்கப்படும்போது அத்தீர்மானங்கள் வெளிப்படைத்தன்மையுடனும் பயனாளிகளுக்கு அதனை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது பற்றிய முழு விபரமும் தெரியப்படுத்தும் விதத்திலும் செயற்படுத்தப்பட வேண்டும். தனித்து வாழும் பெண்களுக்கு வாழ்க்கைக்கான செலவுகளை ஈடு செய்யும் வகையிலான ஓய்வூதியத் திட்டம் வழங்கப்படவேண்டும்.

மேலதிகமான கல்விச் செயற்பாட்டு உதவிகள் வழங்க வேண்டும். எங்களது பிள்ளைகளின் அடைவுகள் இனிமேலும் குறையாது மேம்பட வாய்ப்புக்கள் கிடைத்தல் வேண்டும். பெண் தலைமைக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விக்கான உதவித் தொகை வழங்கப்படவேண்டும். எமது பிள்ளைகளுக்கான உளவியற் தேவைகள் குறித்து ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் அமுற்படுத்தப்பட வேண்டும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட உளப் பாதிப்பும் வறுமையினால் பொருத்தமான சுகாதாரசேவைகளை அணுகமுடியாத தன்மையினாலும், யுத்தகாலத்தில் தோன்றிய பலநோய்கள் இன்றும் தொடரும் தன்மையினாலும் எங்களது முழு ஆற்றலையும் உபயோகித்து உழைக்க முடியாமல் இருக்கின்றோம். எங்கள் பிள்ளைகள் குறைவளர்ச்சியுடன் இருப்பதாக பாடசாலையில் அறிவிக்கின்றார்கள். எங்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும் நாம் வைத்திய வசதிகளை நாடுவதில்லை ஏனெனில் வைத்தியசாலைக்குச் செல்வதாலும் அங்கு பல மணிநேரம் செலவிடுவதாலும் எங்களது ஒருநாள் கூலியினை இழக்கின்றோம்.

தமது கணவரை இழந்த பெண்களும் கணவரிடமிருந்த பிரிந்து வாழும் பெண்களும் சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. சிலசமயங்களில் எமது ஆடைகளும் நடத்தைகளும்கூட விமர்சிக்கப்படுகின்றன. முன்னாள் போராளிகள் மறுமணம் செய்வதற்கு குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் கணவரது குடும்பத்தினரும் சமூகமும் தடையாகவிருக்கின்றன. இந்நிலைமை மாற்றப்படும்விதத்தில் அவர்களது மனநிலையில் மாற்றங்களேற்பட விழிப்புணர்வு நிலைமைகள் கிராமமட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். மீண்டும் குடும்ப பந்தத்தில் இணையவிரும்பும் பெண்கள் சமூகத்தின் அவச்சொல் குறித்துப் பயப்படும் நிலை இருக்கின்றது. மீண்டும் திருமணம் முடிக்கும் பெண்களும் தமது பிள்ளைகளைத் தமது வயோதிப பெற்றோர்களின் கவனிப்பில் விட்டுச் செல்ல நேருவதால் அப்பிள்ளைகளுக்கான கவனிப்பும் குறைகின்றது.

கணவரினால் கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எமது பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு கைவிட்டுப் போகும் கணவர்களிடமிருந்து தாபரிப்புப் பணம் மற்றும் பிள்ளைகளுடைய பராமரிப்புக்கான பணம் ஆகியவற்றை எடுப்பதற்கு வெகு நீண்ட காலம் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது. இத்தகைய ஆண்களை கண்டு பிடிக்கவோ அவர்கள் தங்கள் மனைவிமார்களுக்குத் தொடர்ந்து உதவ வேண்டும் என நிர்ப்பந்திக்கவோ சட்டத்தாலும் காவல் துறையினராலும் இயலாதிருக்கின்றது.

சமூகத்தில் தனியாகவாழும் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் அவர்களின் சமத்துவம், சுயகௌரவம் தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். தாபரிப்பு வழக்குகளின் நடைமுறைகள் மாற்றப்பட்டு பெண்கள் விரைவாக நீதி பெறும் வகையில் வழிவகைகள் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு தடவையும் பெண்கள் பெரும் செலவுகளுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் நீதிமன்றங்களுக்கு வர வேண்டிய நடைமுறைகளை மாற்ற வேண்டும்.

காணாமற்போனோருக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும். எமக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈடுகளின் தன்மையும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறையும் எமக்குத் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும். இழந்த உயிரை ஈடு செய்ய முடியாவிடினும், வழங்கப்படும் நட்ட ஈடு ஓரளவாவது உயிரிழப்பினால் குடும்பம் இழந்தவற்றின் பெறுமதியாக இருக்கவேண்டும்.

போரினாற் பாதிக்கப்பட்ட நிலைமையின்கீழ் மாற்றுத்திறனாளிகளாகப் பெண்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும். அவர்களை அரசாங்கம் இன்றுவரை அங்கீகரிக்கவில்லை.

மாற்றுத்திறனாளிகள் என்பதனை சமூகப் பின்னணியின்கீழ் வரைவிலக்கணம் வரையறுக்கப்பட வேண்டும் அவர்களது எண்ணிக்கை குறித்த வகைகளின் கீழ் வகுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களது எண்ணிக்கை போரினால் அதிகரித்துள்ளது. எனவே அதனைக் கருத்திற் கொண்டு தொழில்வாய்ப்புக்கான அரச ஒதுக்கீடு 3 வீதத்திலிருந்து 9 வீதம் வரை அதிகரிக்கப்பட வேண்டும்.

உரிய சுகாதார வசதிகள், உபகரணங்கள் போன்றன சலுகை அடிப்படையில் அவர்களுக்கு அரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் கவனத்திற்குட்படுத்தப்பட வேண்டும். விசேட கல்வி வசதிகள் அவர்களது அங்கவீனத்தன்மை மற்றும் புரிதல் நிலைமையின்கீழ் வழங்கப்பட வேண்டும்.

இன்றுவரை முன்னாள் போராளிகளின் எண்ணிக்கை ஆவணப்படுத்தப்படவில்லை. அதுமட்டுமன்றி விபரங்களை வழங்கியவுடனேயே இராணுவப் புலனாய்வாளர்கள் விசாரணைகள் என்ற பெயரில் அடிக்கடி அவர்களின் வீடுகளுக்கு வருகின்றனர். அதனால் சமூகம் அவர்களை வித்தியாசமான முறையில் நோக்குகின்றது. இது மிகவும் உளரீதியான பாதிப்பினை எற்படுத்துகின்றது.

சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் பாலியல்ரீதியாக இராணுவத்தினரால் துஸ்பிரயோகப் படுத்தப்பட்டவர்கள் என்ற சமூகவடுவுடன் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். இது மாறா வடுவாக அவர்களைப் பாதிப்பதனால் சமூக, பொருளாதார உளவியல் ஆலோசனைகளை நிலைமாறுகாலப் பொறிமுறையின் கீழ் அரசாங்கம் கட்டாயமாக இணைத்துக் கொண்டு அமுற்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் இவர்களது திறன்களுக்கேற்ப உரிய பொருளாதார வாய்ப்புக்களினை பால்நிலைக் கண்ணோட்டத்துடன் வழங்க வேண்டும். இது அவர்கள் பிறரில் தங்கிவாழலை ஓரளவு கட்டுப்படுத்துவதாகவிருக்கும்.

இங்கே நாம் முன்வைத்துள்ள எந்தக் கோரிக்கைகளும் நீதிக்குப் புறம்பானவையல்ல. எமக்கான உரிமைகளினையே நாம் வேண்டி நிற்கின்றோம். எங்களது உரிமைகளினை வெல்ல காலம் கனிந்துள்ள இத் தருணத்தில் மக்கள் பிரதிநிதிகளாய் நீங்கள் எமக்கான ஆதரவினை அனைத்துத் தளங்களிலும் நீங்கள் வழங்க வேண்டுமென நாம் உரிமையுடன் வேண்டி நிற்கின்றோம். இருபத்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளாய் இவற்றினைக் கவனத்திலெடுப்பீர்களென நாம் நம்பி விடைபெறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியர் வரிசையில்....

**தலைவி காலாண்டு இதழில் ஒவ்வொரு முறையும் ஒரு மாவட்டத்திலிருந்து மிகச் சிறப்பாகச் சமூக சேவையில் ஈடுபடும் மற்றும் சமூகப் பொருளாதார அரசியற், பண்பாட்டு உரிமைகளுக்கும் குரல் கொடுக்கும் ஒரு தலைவியை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றோம். இம்முறை தலைவி இதழின் தலைவியர் வரிசைப் பகுதியினை அலங்கரிக்கின்றார் யாழ்ப்பாண மாவட்டத்தின் அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியத்தின் முன்னாள் தலைவியும், நிலைமாறுகால நீதிக்கான தேசிய பொதுத்தள நிறைவேற்றுக்குழு அங்கத்தவருமாகிய திருமதி வைத்திலிங்கம் நவரஞ்சிதமணி**



தம்பாலை கதிரிப்பாயில் வசிக்கும் நவரஞ்சிதமணி (வயது 54) காணாமலாக்கப்பட்ட குடும்பமொன்றின் தலைவியாவார். இரு பிள்ளைகளின் தாயான இவரின் கணவர் போர்க்காலச் சூழ்நிலையின்போது காணாமலாக்கப்பட்டார். தனது குடும்பத்தினைக் கொண்டு நடாத்தத் தனது மேட்டுநிலத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடாத்துவதுடன் க.பொ.த. சாதாரணதரத்தில் பயிலும் தனது மகனின் கல்விச் செலவினையும் சமாளித்து வருகின்றார்.

போரின்போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட நவரஞ்சிதமணி தன்னைப் போல் போராற் பாதிக்கப்பட்ட பிற பெண்களுடன் இணைந்து அவர்களுக்கிடையில் தமது சுகதுக்கங்களை பகிர்ந்துகொண்டு வாழ்ந்து வருபவர். 2009 காலப்பகுதியிலிருந்து சமூகமட்ட அமைப்புக்கள் பலவற்றில் தன் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தித் தனது வல்லமையினை வளர்த்துக் கொண்டார். மேலும் விழுது நிறுவனத்தின் பயிற்சிகளினையும் பெற்றுத் தன்னாலான அனைத்து மாவட்டச் செயற்பாடுகளிலும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். ஐ.நாவின் சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காய் செயற்படும் ஒரு நெறிப்படுத்துனராய் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டவர்.

தனது தம்பாலை கதிரிப்பாய் கிராமத்தில் இயங்கும் அமரா போரத்தின் அங்கத்தவராகச் செயற்படும் இவர் அமரா போர அங்கத்தவர்களை ஊக்குவித்தல், அமரா மற்றும் சமாச அங்கத்தவர்களுக்கு நிலைமாறுகாலநீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துதல், அவர்களுக்கான பயிற்சிகளினை நடாத்துதல், சேவை வழங்குனர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணித் தமது கிராம மக்களின் பிரச்சினைகளினைத் தீர்த்து வைக்க விழைதல் எனப் பற்பல செயற்பாடுகளிலும் தன்னை நிலைநிறுத்தி வருகின்றார். வாசகர்வட்டக் கலந்துரையாடல்கள் மூலம் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

யுத்தத்தினால் தனது கணவரையும் உறவுகளையும் இழந்தவரென்பதால், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் பெண்தலைமைத்துவக் குடும்பப் பெண்களின் பிரச்சினைகளை அடையாளங் காண்பதில் நவரஞ்சிதமணிக்கு ஆர்வம் அதிகம். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கெல்லாம் குரலெழுப்ப முடியுமோ அங்கெல்லாம் தனது குரலினைப் பதிவு செய்வதில் அவர் ஒருபோதும் தயங்குவதில்லை. தனது கிராமத்திலிருந்து தேசியமட்டம் வரை தனது மக்களின் பிரச்சினைகளினைக் கொண்டு சென்று வாதாடுவதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றார். அதற்கு வாய்ப்பாகத் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட மற்றும் தேசிய வலையமைப்புக்களைப் பயன்படுத்தி வருகின்றார்.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் பயிற்சிகளையம் ஒத்துழைப்புக்களையும் தனது தைரியத்தையும் பயன்படுத்திப் போராற் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகக் குரல்கொடுக்கும் வாய்ப்பை உள்ளூரிலும், தேசிய மட்டத்திலும் இவர் வினைத்திறன்மிக்கதாக மாற்றி வருகின்றமையினால் இவர் ஏனையோரால் அடையாளப்படுத்தப்படும் பெண்மணியாக உள்ளார்.

தனது ஆளுமையினை வளப்படுத்தும் எந்தப் பயிற்சிகளிலும் பங்குபற்றுவதில் அவர் தவறுவதில்லை. குறிப்பாக, மகளிர் உரிமைகள், பெண்களுக்கெதிரான வன்முறைகளும், பாதுகாப்புப் பொறிமுறைகளும், திட்ட முகாமைத்துவம், பால்நிலையும், சமூக உள்வாங்கலும், நிலைமாறுகால நீதிச் செயன்முறையும் பொறிமுறைகளும், தலைமைத்துவமும் இலகுபடுத்தலும், தகவலறியும் உரிமைகள், ஊடகங்களும் ஆதரித்து வாதிடலும், போன்ற பயிற்சிகள் தனது ஆளுமையை விருத்திசெய்யப் பெரிதும் உதவியதாகக் கூறுகின்றார்.

**உண்மையில் எனது குடும்பச் சூழ்நிலையில் எனது வாழ்வாதாரத்தினை விட்டுவிட்டு அடிக்கடி பயணங்கள் மேற்கொள்வது சிரமமானதுதான் என்றாலும் நான் ஒரு போதும் தடுமாறுவதில்லை. ஏற்கனவே இருதயநோயாளியான எனக்குப் பல மாடிகள் ஏறும்போது நினைப்பேன் எனக்கு இங்கேயே ஏதாவது ஆகிவிடுமோ என்று. ஆனாலும் எனது முயற்சிகள் ஒரு போதும் தளர்வதில்லை.**

மேலும், நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் கீழ் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் குடும்பங்களைப் பதிவு செய்வதற்குக் காணாமற் போனோர் அலுவலகத்தினை அணுகுவதற்கு வழிகாட்டல், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கும் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்குதல், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுடன் இது தொடர்பான தொடர்புகளினைப் பேணல் என வழிகாட்டல்களை எவ்வித இனமத மொழி பேதமுமின்றி வழங்கி வருகின்றார். சிங்கள மொழி பேசுவதிலும சிறிது பரிச்சயமுள்ளதனால் அனுராதபுரம், மொனராகலை, திருகோணமலை, கண்டி, மாத்தறை, ஹம்பாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியர் வரிசையில்....




தோட்டை போன்ற மாவட்டங்களில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களது பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கும் உதவி வருகின்றார்.

தமது பிரதேசங்களில் ஏற்படும் பிரச்சினைகளை உரிய தரப்புடன் கலந்துரையாடி தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பை தாம் இணைந்து செயற்படுவதன் மூலமே பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது என்கின்றார் நவரஞ்சிதமணி. அதன்மூலம் நாட்டில் மீண்டும் போர் ஏற்படுவதனைத் தடுப்பதற்கும் இனங்களிடையே சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் பெண்களாகிய தம்மால் அதிக அழுத்தம் கொடுக்க முடியுமென நம்புகின்றார்.



மேலும், 'விழுதின் திட்டச் செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கு முன்னர், நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் போராற் பாதிக்கப்பட்ட பெண்களைப் பற்றி நாம் அதிகம் அறிந்திருக்கவில்லை. அனுபவப் பகிர்வு விஜயங்களின் மூலம் சிங்களப் பெண்கள் பற்றியும் முஸ்லிம் பெண்கள் பற்றியும், அவர்களும் எம்மைப் போன்றே போரின் பாதிப்புக்களை பிறிதொரு வடிவில் சந்தித்திருக்கின்றனர் என்பதனை அறியக்கூடியதாய் இருந்தது. மாத்தறை மற்றும் அனுராதபுரம் கெப்பத்திக்கொல்லாவையைச் சேர்ந்த பெண்களைச் சந்தித்தபோது, அவர்களும் போரின் கொடூர அனுபவங்களைப் பெற்றுள்ளார்கள் என உணர்ந்தோம் என்கின்றார்'.

'பல்வேறு திட்டங்களுடன் நாம் தொடர்புபட்டமையினால் தற்போது எமக்கு இன்று யாரையும் சந்தித்து எமது பிரச்சினைகளைச் சமூகத்தின் பிரதிநிதியாக ஆணித்தரமாக முன்வைக்க முடியும். உண்மையில் முன்பு நாம் வெறுமனே பிரச்சினைகளைக் கலந்துரையாடினோம். அப்போதெல்லாம் அரச நிறுவனங்களுக்கோ ஆணைக்குழுக்களுக்கோ சென்று பிரச்சினைகள் தேவைகள் பற்றிப் பேசவே எமக்குப் பயம். ஒழுங்கமைந்த முறையில் எங்கே யாரை அணுகுவது எவ்வாறு பக்குவமாகப் பேசுவது, எந்த வழிவகையினைக் கையாண்டால் நாம் வெற்றி பெறலாம் என்ற நுணுக்கங்கள் எமக்குத் தற்போது கைவந்த கலையாகி விட்டது. இதை மேற்கொள்ளக் கூடிய வழிவகைகள் பற்றி நாம் தற்போது கற்றுள்ளதால், எந்தவோர் சேவை வழங்குனரிடமோ வலையமைப்புக்களிடமோ சிவில் அமைப்புக்களிடமோ பயமின்றிச் சென்று எமது பிரச்சினைகளைப் பேசும் வல்லமையினைப் பெற்றுவிட்டோம்' என்று திடமான நம்பிக்கையுடன் கூறி எம்மையும் நம்பிக்கை பெற வைக்கின்றார் அமரா போரத்தின் மாவட்டத் தலைவி.

'உண்மையில் முன்பு பெண் தலைமை தாங்கும் பெண்களின் பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்வாறு பிரச்சினைகளைப் பாதிக்கப்பட்டவர்களுடன் பேசுவது, அவர்களை நம்பிக்கை பெறச் செய்வது என்பதெல்லாம் எனக்குப் பெரும் சவாலாக இருந்தது. ஆனால் நான் பெற்ற பயிற்சியும் விசாலமான தெளிந்த விளக்கங்களும் எவ்வாறு நீதிக்காய் போராடுவது என்பதனைக் கற்றுத் தந்துவிட்டது. உண்மையில் நான் இவ்விடத்தில் விழுதின் பயிற்சிகளுக்கும் வளவாளர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். விழுதின் வலையமைப்பு உருவாக்கம், பரிந்துரை செய்தல் மற்றும் ஆதரித்து வாதிடற் பயிற்சி அதன் போதான அனுபவங்கள் மிகவும் பயனுடையதாக உள்ளன. சரியான திட்டமிடலுடன் யாரிடம் எந்தவிடத்தில் எப்பிரச்சினைகளை வெளிப்படுத்தலாம் என்பது தொடர்பான சரியான வழிகாட்டலும் தெளிவினையும் நான் விழுதிடமிருந்து கற்றுக் கொண்டு வருகின்றேன்' என்கின்றார் மேலும்.

யுத்தத்தால் வட, கிழக்குப் பெண்கள் எவ்வாறான வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றார்கள், எவ்வாறு துன்புறுத்தப்பட்டார்கள் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொண்டார்கள் என்பதனை அனுபவத்தில் பெற்றுக்கொண்டவள் நான். என்னைப் போன்றே ஏனைய பெண்களும் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பார்கள் என்பதனை என்னால் அனுமானிக்க முடியும். அதனாற்தான் தேசியமட்டத்தில் இடம்பெறும் எந்தச் சந்திப்புக்களினையும் நான் தவிர்ப்பதில்லை. உடனே பங்குபற்றி விடுவேன். உண்மையில் எனது குடும்பச் சூழ்நிலையில் எனது வாழ்வாதாரத்தினை விட்டுவிட்டு அடிக்கடி பயணங்கள் மேற்கொள்வது சிரமமானதுதான் என்றாலும் நான் ஒருபோதும் தடுமாறுவதில்லை. ஏற்கனவே இருதயநோயாளியான எனக்குப் பல மாடிகள் ஏறும்போது நினைப்பேன் எனக்கு இங்கேயே ஏதாவது ஆகிவிடுமோ என்று. ஆனாலும் எனது முயற்சிகள் ஒருபோதும் தளர்வதில்லை. நான் தேசிய பெண்கள் குழுவுக்கு எங்களது பிரச்சினைகளினை நேரடியாகப் பிரசன்னமாகி முன்வைத்திருக்கின்றேன். தேசிய மாநாடுகளில் பங்குபற்றியிருக்கின்றேன். காணாமற்போனோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு, மாவட்ட செயலகம், திணைக்களங்கள் என அனைவரையும் சந்தித்து எங்களது பிரச்சினைகளை அவர்களுக்கு விளக்கியிருக்கின்றோம். ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரேரணை 1325 தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களில் பங்குபற்றி வடக்கு, கிழக்குப் பெண்களின் சார்பாக எனது கருத்துக்களினை முன்வைத்திருக்கின்றேன். ஊடகமாநாடுகளை நடாத்தியிருக்கின்றேன். அரசியல்வாதிகளை எமது பொதுமேடைகளுக்கு அழைத்து அவர்களிடம் உறுதிமொழிகளைப் பெற்றுப் பாராளுமன்றில் எமக்காய் பேச வைத்திருக்கின்றோம். தரவுகளையும் சான்றுகளையும் கைகளில் வைத்தே எமது ஒவ்வொரு ஆதரித்துவாதிடல் நடவடிக்கையும் அமைவது எமது பலமாகும்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று செயற்படும் இப் பெண்மணியின் மிடுக்கு நிச்சயம் பெண்களது சமூக, பொருளாதார, அரசியற் பண்பாட்டு உரிமைகளினை வென்றெடுக்க நம்பிக்கையினை எமது பெண்களிடையே விதைக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. உங்கள் பணி மாண்புடன் அமைய தலைவியும் வாழ்த்துகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நுகர்விற்குக் கணிசமாகப் பங்களிக்கும் குடத்தனை கிராமப் பெண் உற்பத்தியாளர்கள்












யாழ். மாவட்டத்தில் தமது தளராத முயற்சியினால் மாவட்ட மக்களின் உண வுற்பத்தித் தேவைகளினைப் பூர்த்தி செய்வதில் முன்னிற்று செயற்பட்டு நம்மை வியக்க வைக்கின்றனர் குடத் தனை உற்பத்திக் கிராமப் பெண் உற் பத்தியாளர்கள். ஆம் குடத்தனைக் கிராமம் யாழ் மாவட்டத்தின் வட மராட்சி - கிழக்கு மருதங்கேணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கிரா மமாகும்.

இக்கிராமத்திலுள்ள நலிவற்ற பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கோடு அரசின் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் மருதங் கேணி பிரதேச செயலகம் பொறுப்பெ டுத்து இந்த உற்பத்திக் கிராமத்தினை உருவாக்கியிருக்கின்றது. ஆரம்பத்தில் வெறும் பத்து நலிவற்ற பெண்களு டன் ஆரம்பமான இந்தக் கிராமத்தின் உற்பத்தி படிப்படியாக ஆரம்பித்து இன்று மாவட்டத்தின் தேவையில் சி றுபகுதியினையாவது பூர்த்தி செய்யும் விதத்தில் முன்னேற்றமடைந்து விரி வடைந்துள்ளது. ஆரம்பத்தில் பெரும் பாலும் அரசின் உலர் உணவு நிவார ணத் திட்டத்திற்கே தமது அரிசி மா, உழுத்தம்மா, மிளகாய்த்தூள் போன்ற வற்றினை வழங்கி தமது வருமானத் தினை ஈட்டி வந்தனர்.

ஆனால் காலப்போக்கில் திட்டம் நிறைவுபெற அவர்கள் தமது கிராமத் தின் குறைந்தளவு வாடிக்கையாளர் களுடனேயே தமது உற்பத்திகளைச் செய்து விற்பனை செய்யவேண்டியி ருந்தது. சந்தைப்படுத்தல் திறனின்மை மற்றும் முதலீடுகளின் மீதான அருந் தல் தன்மை அவர்களின் உந்பத்திச் செயற்பாடுகளின் மீது நம்பிக்கையற்ற தன்மையினை அவர்களுக்கு ஏற்படுத் தியது. இதனால் அவர்களின் எண் ணிக்கை பத்திலிருந்து சடுதியாக ஐந் தாகக் குறைந்தது.

இத்தகைய சூழலில்தான் அவர் களுக்குக் கைகொடுத்தது விழுதி னால் அமுற்படுத்தப்படும் நலிவற்ற மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பு வதற்காகச் சிவில் சமூக அமைப்புக்களினைப் பலப்ப டுத்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டமொன்று. இத்திட்டத்தினை விழுதுடன் இணைந்து எச்.ஐ. நிறுவனம், கமீட் மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு மையம் ஆகியனவும் இணைந்து யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்றது. இந்தப் பெண் உற்பத்தியாளர்களது தேக்க நிலைமையினைப் போக்குவதற்காக இத்திட்டத்தின் கீழ் உள்வாங்குவதற் கான அழுத்தங்களினை அரச அலு வலர்களும், இந்தப் பெண்களும் திட்டம் சம்பந்தமான கலந்துரையா டல்களின் போது முன்வைத்திருந்த னர்.

அதன்பிரகாரம் குறித்த ஐரோப்பிய ஒன்றியத் திட்டச்செயற்பாடுகளின் கீழ் இந்த உற்பத்திக் கிராமத்தினை உள் வாங்குவதென்றும் அவர்களது ஆற் றல்களினை மேம்படுத்தி அவர்களது உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நிதிவழங்கலினை மேற்கொள்வ தென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற் காக அவர்களது ஆற்றல் மதிப்பீடு, ம் உற்பத்தி, வியாபாரம் பற்றிய மதிப்பீ டுகள் மற்றும் அவர்களது நிலைபேற் றுத்தன்மை விழுதின் அலுவர்களால் தீர்க்கதரிசனத்துடன் முன்னெடுக்கப் பட்டு, திட்டத்தில் அப் பெண்கள் உள்வாங்கப்பட்டனர்.

மிகச் சிறப்பான வல்லமையினைக் கட்டியெழுப்பும் பயிற்சிகளினை இத்திட்டத்தின் கீழ் நிபுணர்களிடமி ருந்து பெற்றுக்கொண்ட இந்த உற்பத் திக் கிராமப் பெண்கள் பொதியிடல் தொடர்பான விசேட பயிற்சியினையும் பெயரிடல் பற்றிய பயிற்சியினையும் பெற்று உடனடியாகத் தமது பொதியி டலில் மாற்றங்களை உட்புகுத்தினர். முன்னர் காணப்பட்ட பொதியிடல் மற்றும் பெயரிடல் வாடிக்கையாளர்க ளைக் கவரவில்லை.

பயிற்சியின் பின்னர் அவர்களது உற்பத்திகள் யாவும் வாடிக்கை யாளர்களைக் கவரும் விதத்தில் பொதியிடப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டமையினால் அதிகளவான வாடிக் கையாளர்கள் இவர்களது உற்பத்தி களினைத் தேடிச்சென்று வாங்கும் நிலையேற்பட்டு, இன்றுவரை இந்நி லைமை தொடர்கின்றமை மகிழ்ச்சி க்குரியதாகும்.

நல்லூரில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிதியத்தின் பல்பொ ருள் அங்காடிக்கு குடத்தனை உற் பத்திக் கிராம உற்பத்தியாளர்கள் பார்வையிடல் மற்றும் கற்றலுக்கான விஜயமொன்றினை மேற்கொண்டி ருந்த நிலையில், அங்கும் பல உற் பத்தியாளர்கள் மற்றும் விற்பனை யாளர்களுடனான தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

குறித்த பல்பொருள் அங்காடி அலு வலர்கள் இவர்களுக்கான சில பயிற்சி களையும் வழிகாட்டல்களையும் வழங்கினர். அதுமட்டுமின்றி பெண் உற்பத்தியாளர்கள் தமது சந்தைப்படுத் தலினை மேம்படுத்தும் பொருட்டு விற்பனையிலும் ஈடுபட்டனர். குறித்த நாளில் மட்டுமே அவர்கள் சுமார் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களினை விற்பனை செய்தும் சாதனை படைத்துள்ளனர்.

இதன் விளைவாக அவர்களது உற் பத்தியின் பெயரும் புகழும் யாழ். மாவட்டத்தில் பிரபல்யமடைய ஆரம்பித்தது. இன்று நாம் தியாகி அறக்கொடை நிதிய சுப்பர் மார்க் கெற்றிலும், கூட்டுறவுச்சங்கங்கள் மற் றும் தனியார் கடைகளிலும் 'கேபீவி' என்ற குடத்தனை உற்பத்திக் கிராமத் தின் உற்பத்திகளினைக் காணவும் வாங்கவும் முடியும்.

கொரோனா கொள்ளைநோய் பரவத்தொடங்கிய மார்ச் - ஏப்ரல் காலப்பரப்பில் பல அரசசார்பற்ற நிறுவனங்களும் இவர்களது உற்பத்தி களினைக் கொள்வனவு செய்து நாடு முடக்கப்பட்டிருந்தபோது பாதிக்கப் பட்ட நலிவுற்ற மக்களுக்கு வழங்கியி ருந்தனர். விழுதும் சுமார் இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட தொகை யில் அவர்களிடமிருந்து உற்பத்திப் பொருட்களை கொரோனா நிவாரணப் பணிக்காகக் கொள்வனவு செய்திருந் தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வளர்ந்துவரும் இந்தப் பெண் உற்பத்தியாளர்கள் மாதாந்தம் ஐயாயிரத்துக்கும் மேல் ஒவ்வொ ருவரும் இன்று வருமானமாகப் பெறு வதுடன் இவர்களது உற்பத்திகளை நாடி வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எதிர்காலத் தில் பெண்தொழில் முயற்சியாண்மை யாளர்களுக் கெல்லாம் இவர்களது வழிகாட்டல் உறுதுணையாகு மென் பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. இக் குடத்தனை உற்பத்திக் கிராமப் பெண் உற்பத்தியாளர்கள் நாடளாவி யரீதியில் விரைவில் பிரபல்யமடைய தலைவியும் மனப்பூர்வமாக வாழ்த்து கின்றாள்.

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்திடமிருந்து...

அன்புத் தோழியரே! உங்களது சங்கங்களினது முன்னோடியான செயற் பாடுகள் தொடர்பான விடயங்களினை எமக்குச் சான்றுகளுடன் அனுப்பி வையுங்கள். அவற்றின் நம்பகத்தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகள்.

உங்களது ஆக்கங்களினை நீங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, புத் தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விழுதின் கிளைக ளிலேயும் கையளிக்கலாம். அங்கிருந்து தலைவி செய்திமடலினை இலவச மாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்கள் பற்றிய உங்கள் சுதந்திரமான, காத்திரமான கருத்துக்களினை நாம் வரவேற்கின்றோம். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் உங்கள் ஆக்கங்களை உறுதிப் படுத்தல்களுடன் அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

உங்கள் ஆக்கங்கள், கருத்துக்கள் வந்தடைய வேண்டிய முகவரி:

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**
191, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04
☏ +94 11 250 62 72 ☎ +94 11 258 51 90
✉ info@viluthu.org 🌐 www.viluthu.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org